**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2011–2012 ஆம் நிதியாண்டு – 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான ஏழு இல்லங்களுக்கு திட்டத் தொடரணையும் ரூ.62,49,600/– நிதி ஒப்பளிப்பு செய்தல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.69 நாள்:09–12– 2011

கார்த்திகை 23, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.70, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.ந2.1)த் துறை, நாள் 6.9.2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3674/மா.தி.ந.2.1/2011, நாள் 22.7.2011.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2010–2011ம் நிதியாண்டிற்கு, 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான ஏழு இல்லங்களுக்கென ரூ.71,76,400/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் முறையே பாலவிஹார், வித்யவிகாசினி மற்றும் திருச்சிராப்பள்ளி பல்நோக்கு சமூகப்பணி மையம் ஆகிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லங்களில், தொழிற் பயிற்சியாக வழங்கப்பட்டு வந்த கணினி பயிற்சி, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு பயனற்றதாக உள்ளது எனத் தெரிவித்து, இந்நிதியாண்டு (2011–2012) முதல் கணினி பயிற்சிக்கு பதிலாக பாய் முடைதல் பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து ரூ.67,80,000/–ஐ 2011–2012 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.62,49,600/– போக மீதமுள்ள தொகையான ரூ.5,30,400/–ஐ 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்திய /இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, பதினான்கு வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கு ஏற்கனவே செயல்பட்டு வரும் ஏழு இல்லங்களை 2011–2012 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்த இவ்வாணையுடன் இணைப்பில் கண்டுள்ளவாறு ரூ.62,49,600/–(ரூபாய் அறுபத்து இரண்டு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து அறுநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்த அரசு ஆணையிடுகிறது.

4. மேலே 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம்–MG– மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி –09. உதவித் தொகை–01. நடப்புச் செலவுக்கான உதவித் தொகை".
(த.தொ.கு 2235–02–101–MG–0914)

5. மேலும், 2011–2012 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் ரூ.62,49,600/– போக மீதமுள்ள தொகையான ரூ.5,30,400/–ஐ 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. (i) மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களை மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைச் செய்யப்படும் தகுதி வாய்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(ii) தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் நீக்கும் அதிகாரமும், புதிய இல்லங்கள் தொடங்குவதற்கான மாவட்டங்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் நீக்கவும் அரசின் ஒப்புதலைப் பெற்று செயல்படுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(iii) மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பெற்று உரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி(சந)/63716/2011, நாள் 09.12.2011–ன் இசைவின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–5/9/35.

தலைமைக் கணக்காயர், சென்னை—18/35
தலைமைக் கணக்காயர், சென்னை— 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>

நிதி (சந) துறை, சென்னை—9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
செயலாளர் (மா.திந.துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை—9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

(அரசாணை(நிலை) எண்.69 மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2..1)த் துறை, நாள் 09.12.2011 )

**2011– 12 ஆம் நிதியாண்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய இல்லங்களை தொடர செலவின விவரம்**

தொடர் செலவினம்

**தொகை ரூ.**

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம்<br>ரூ.6,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | 72,000/– |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/– x 1 நபர்கள் x 12 மாதங்கள் | 60,000/– |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | 36,000/– |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | 24,000/– |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | 48,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/– x 2 நபர்கள் x 12 மாதங்கள் | 1,44,000/– |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/– x 1 நபர்கள் x 12 மாதங்கள் | 24,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.450/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 12 மாதங்கள் | 2,16,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | 40,000/– |
| 10. | வாடகை / கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டிடம் எனில்) மற்றும் மின் கட்டணம்<br>ரூ.13,000/– x 12 மாதங்கள் | 1,56,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/– x 12 மாதங்கள் | 12,000/– |
| 12. | மருந்துகள் ரூ.1,500/– x 12 மாதங்கள் | 18,000/– |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200 x 50நபர்கள் | 10,000/– |
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/– x 40 நபர்கள் | 2,000/– |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 12 மாதங்கள் | 10,800/– |
| 16. | தோட்டக்கலை / மெழுகுவர்த்தி/பேக்கரி பயிற்சி | 20,000/– |
| | **மொத்தம்** | **8,92,800–** |

| | | |
|---|---|---|
| **1.** | ஒரு இல்லத்திற்கான செலவினம் | **8,92,000/–** |
| **2.** | ஏழு இல்லங்களுக்கான செலவினம்<br>(ரூ.8,92,000/– x 7) | **62,49,600/–** |

**(ரூபாய் அறுபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து அறுநூறு மட்டும்)**

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.